

விருதுநகர் மாவட்டம் , சிவகாசி ஊராட்சி ஒன்றியம் , அனுப்பங்குளம் மற்றும் செவலூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில், ரூ .1.80 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 32 குடியிருப்பு வீடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்தார். உடன் சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன் உள்ளார்.



சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தில் நேற்று முன்தினம் (18.10.2024) பால் வளத்துறை மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமையில் அனைத்து மாவட்ட ஆவின் பொது மேலாளர்கள் மற்றும் துணைப் பதிவாளர்கள் (பால்வளம்) உடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சத்யபிரத சாகு, பால்வளத்துறை இயக்குநர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் டாக்டர். சு.வினீத், ஆவின் இணை நிருவாக இயக்குநர் திருமதி. க.பொற்கொடி, உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உமர் அப்துல்லா தலைமையில் முதல் அமைச்சரவைக் கூட்டம்

# காஷ்மீருக்கு தனி அந்தஸ்து!

## தீர்மானம் நிறைவேற்றம்!

ஜம்மு, அக். 19 -

ஜம்மு - காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்க ஒன்றிய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் உமர் அப்துல்லா தலைமையில் நடைபெற்ற முதல் அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜம்மு - காஷ்மீர் முதலமைச்சராக தேசிய மாநாட்டு கட்சியின் துணைத் தலைவர் உமர் அப்துல்லா பதவியேற்றதை தொடர்ந்து, மாநில அந்தஸ்து பெறும் நடவடிக்கையை தீவிரப்படுத்தி உள்ளார்.

அதன் தொடர்ச்சியாக உமர் அப்துல்லா தலைமையில் முதல் அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது.

அதில், ஜம்மு - காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி அவர்களுக்குச் சேவைசெய்ய அதிகாரம் தேவை என்றும் எனவே காஷ்மீருக்கு ஒன்றிய அரசு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தின் வரைவு அறிக்கையுடன் ஓரிரு தினங்களில் முதலமைச்சர் உமர் அப்துல்லா, டெல்லி சென்று பிரதமர் மோடியிடம் நேரில் வழங்கி வலியுறுத்த இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

### நிலைப்படுத்தப்பட்ட (பச்சை நிற பாக்கெட்) பாலின்

# விற்பனை குறைப்பு - உற்பத்தி நிறுத்தம் போன்ற எந்த முடிவையும் எடுக்கவில்லை!

## ‘ஆவின்’ நிறுவனம் விளக்கம்!

சென்னை, அக். 19 -

ஆவின் நிறுவனம் நிலைப்படுத்தப்பட்ட பாலின் (பச்சை நிற பால்) விற்பனை குறைப்பு மற்றும் உற்பத்தி நிறுத்தம் என்று எந்த ஒரு முடிவையும் எடுக்கவில்லை.

மக்கள் நலன் கருதி, எதிர்வரும் பால் தேவையை கருத்தில் கொண்டும் மற்றும் பால் சந்தையில் அனைவரும் விரும்பும் வகையில் வைட்டமின் ஏ மற்றும் டி செறிவூட்டப்பட்டு மற்றும் இதர கொழுப்புச் சத்துக்களை சற்று உயர்த்தி புதிய வகையான பாலினை அறிமுகப்படுத்த ஆய்வு மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் பொது மக்களிடம் கருத்துக்களையும் கேட்கப்பட உள்ளது. மேலும் எந்த விதமான புதிய வகை பாலையும் இதுவரை ஆவின் விற்பனை செய்ய தொடங்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆவின் நிறுவனம் புதிய வகையான பால் வகைகளை விற்பனை தொடங்கும் பட்சத்தில் அனைத்து ஊடகங்களுக்கும் தெரிவித்த பின்னரே தொடங்கப்படும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

